# யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
## First Term Examination – 2020 – Grade 11

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வியும் கணக்கீடும் | 60 | T | I | மூன்று மணித்தியாலங்கள் Three Hours |

சுட்டெண் Index No

## வணிகக்கல்வியும் கணக்கீடும்

### பகுதி - I

**பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 1-4 வரையான வினாக்களுக்கு விடை தருக.**
தோட்டத்தில் வேலை செய்த களைப்பைப் போக்க விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்படும் விதுரன் சிற்றுண்டிச்சாலைக்கு சென்ற கமலி பழப்பானம் ஒன்றையும் விமலி பால் கோப்பி ஒன்றையும் வாங்கினர்.

01. விதுரன் சிற்றுண்டிச்சாலையால் பூர்த்தி செய்யப்படும் மனிததேவை எது
    1. உணவு 2. வீடு 3. கல்வி 4. பாதுகாப்பு

2. விதுரன் சிற்றுறுண்டிச்சாலை எவ்வகை வணிக அமைப்பை சார்ந்தது.
    1. தனியுடமை 2. கூட்டுறவுச்சங்கம் 3. சங்கவகையான 4. பங்குடமை

3. மேலே கூறப்பட்ட சம்பவத்தில் கமலியினதும் விமலியினதும்
    1. தேவைகள் வேறுபட்டவை 2. விருப்பங்கள் ஒரேமாதிரியானவை
    3. தேவைகள் ஒரே மாதிரியானவை 4. விருப்பங்கள் வரையறுக்கப்பட்டவை

4. விதுரன் சிற்றுண்டிச்சாலையில் பயன்படுத்தும் பழங்கள் எத்தகைய உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்
    1. உழைப்பு 2. நிலம் 3. முயற்சி 4. மூலதனம்

5. சட்டஆளுமை கொண்ட பங்குகளை வழங்கி மூலதனம் திரட்டக்கூடிய வணிக அமைப்பு வகை
    1. வரையறுத்த கம்பனி 2. வரையறுக்கப்படாத கம்பனி
    3. கரைகடந்த கம்பனி 4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

6. அதிபர் மாணவத்தலைவர்களை நியமித்து அவர்களுக்கு மாணவர்களை மேற்பார்வை செய்யும் பணிகளை வழங்கினார். இது எத்தகைய முகாமைத்துவ கருமம் ஆகும்.
    1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. நெறிப்படுத்தல் 4. கட்டுப்படுத்தல்

7. தனியுடமை வணிகத்தில் அனுகூலமான பண்புகள் மட்டுமன்றி பிரதிகூலமான பண்புகளும் உள்ளன. அவற்றை உள்ளடக்கிய கூற்றை தெரிவு செய்க
    1. இலாபத்தை தனியாக அனுபவித்தல், சட்டத்தாக்கம் குறைவாக இருத்தல்
    2. சட்ட செல்வாக்கு குறைவு, தொடர்ந்து இயங்கும் தன்மை இல்லாதிருத்தல்
    3. தொடர்ந்து இயங்கும் தன்மை இல்லாதிருத்தல், பொறுப்புக்கள் வரையறுக்கப்படாதிருத்தல்
    4. பொறுப்புக்கள் வரையறுக்கப்படாதிருத்தல், சட்ட ஆளுமை இல்லாதிருத்தல்

8. பரீட்சை மீதி தயாரிப்பதன் பிரதான நோக்கம்
    1. இரட்டை பதிவின் திருத்தமான தன்மையை உறுதி செய்து கொள்ளல்
    2. இரட்டை பதிவின் கணிய ரீதியான வழுவின்மையை உறுதிசெய்தல்
    3. இலாப நட்டத்தை உறுதி செய்தல்
    4. சொத்துக்கள் பொறுப்புக்களின் பெறுமதியை உறுதி செய்தல்

9. உம்மிடமுள்ள செலுலர் தொலைபேசியில் உமது நண்பருக்கு தொலைபேசி அழைப்பை விடுக்கும் போது இடம்பெறும் சரியான செயற்பாடு
    1. அனுப்புபவர் → செய்தி → ஊடகம் → பெறுபவர் → பின்னூட்டல் → துலங்கல்
    2. அனுப்புபவர் → ஊடகம் → செய்தி → பின்னூட்டல் → பெறுபவர் → துலங்கல்
    3. அனுப்புபவர் → ஊடகம் → பெறுபவர் → செய்தி → பின்னூட்டல் → துலங்கல்
    4. அனுப்புபவர் → செய்தி → ஊடகம் → பெறுபவர் → துலங்கல் → பின்னூட்டல்

**சிறந்த கட்டடப் பொருள் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் "ஆதணி கட்டடப் பொருள் உற்பத்திகள்" வணிகத்தின் உரிமையாளரான ஆதனன், ஆதி ஆகியோருக்கு 2019ம் ஆண்டிற்கான சிறந்த உற்பத்தியாளர் விருது கிடைக்கப் பெற்றதுடன் அரசால் உரிமையாளர்களுக்கும் ஊழியர் ஒருவருக்கும் இலண்டனுக்கு சுற்றுலா வழங்கப்பட்டது.**

மேலே குறிப்பிட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 10 – 12 வரையான வினாக்களுக்கு விடை தருக.

10. "ஆதணி கட்டடப்பொருட்கள் உற்பத்திகள்" வணிகத்தின் புறச்சூழல் காரணி எது
    1.அரசு    2. ஆதனன்    3. ஆதி    4. ஊழியர்

11. இவ்வணிகத்திற்கு 2019இற்கான சிறந்தஉற்பத்தியாளர் விருது கிடைக்கப்பெற்றமை அவ்வணிகத்தின்
    1. பலவீனம்    2. வாய்ப்பு    3. பலம்    4. அச்சுறுத்தல்

12. "ஆதணி கட்டடப் பொருள் உற்பத்திகள்" வணிகம் தொடர்பான சரியான கூற்று
    1. ஆதணி உற்பத்திகள் வணிகம் சட்ட ஆளுமை உடையது
    2. ஆதணி உற்பத்திகள் வணிகம் பெயரைப்பதிவு செய்தல் கட்டாயமானது அல்ல
    3. ஆதனன், ஆதி ஆகியோர் நட்டப் பொறுப்பு வரையறுக்கப்படாததாகும்.
    4. இவ்வணிகம் தொடர்ந்து இயங்கும் தன்மை கொண்டது.

13. வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியானது ஒரு கணக்கீட்டு வழுவின் தாக்கம் காரணமாக சமப்படவில்லை அவ்வேறுபாடு 4000 ரூபா தொங்கல் கணக்கில் செலவில் வைக்கப்பட்டது.
    1. ரூபா 4000 சம்பள கொடுப்பனவு சம்பளக்கணக்கில் பதியப்படாமை ஆகும்.
    2. செலுத்தப்பட்ட ரூபா 4000 மின்கட்டணம் மின்கட்டணக்கணக்கில் 2000ரூபா என பதியப்பட்டமை
    3. கடன் கொடுத்தோருக்கு செலுத்திய ரூபா 4000 கணக்குகளில் பதியப்படாமை.
    4. ரூபா 4000இற்கு கொள்வனவு செய்த இயந்திரம், இயந்திரக்கணக்கில் 8000 ரூபா எனப்பதியப்பட்டமை ஆகும்.

14. இலங்கை வங்கியில் நடைமுறைக்கணக்கை பேணும் நிமல் என்பவர் சுனிலுக்கு ரூபா 5000இனை செலுத்த காசோலையினை வழங்கினார். இங்கு .........1.......... நிமல் ............2......... சுனில் ............3............. இலங்கை வங்கியுமாகும். மேற்குறித்த கூற்றில் 1, 2, 3 என வெற்றிடத்திற்குரிய சரியான பதங்களை ஒழுங்குமுறையில் தெரிவு செய்க
    1. கட்டளையிடுபவர், கட்டளை பெறுபவர், பணம் பெறுபவர்
    2. கட்டளை பெறுபவர், கட்டளை இடுபவர், பணம் பெறுபவர்
    3. கட்டளை இடுபவர், பணம் பெறுபவர், கட்டளை பெறுபவர்
    4. பணம் பெறுபவர், கட்டளை இடுபவர், கட்டளை பெறுபவர்

15. கடன் கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட 2000ரூபா பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டது. இதனால் வணிகத்தில்
    1. வங்கி கணக்கு மீதி அதிகரிப்பதோடு கடன் கொடுத்தோர் கணக்கு மீதியும் அதிகரிக்கும்
    2. வங்கி கணக்கு மீதி அதிகரித்து கடன் கொடுத்தோர் கணக்கு மீதி குறையும்
    3. வங்கி கணக்கு மீதி குறைந்து கடன் கொடுத்தோர் கணக்கு மீதி அதிகரிக்கும்
    4. வங்கி கணக்கு மீதி குறைவதோடு கடன் கொடுத்தோர் கணக்கு மீதியும் குறையும்

16. இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் அமெரிக்க டொலர் பெறுமதியானது அதிகரித்து செல்லுதலானது இரத்தினக்கல் ஏற்றுமதிக்கம்பனிக்கான ஒரு
    1. சட்டச்சூழல் காரணி
    2. புறச்சூழல் காரணி
    3. பொருளாதார சூழல் காரணி
    4. தொழில்நுட்பச்சூழல் காரணி

17. விபுலன் வணிகத்தின் 2019 டிசம்பர் மாதத்திற்கான வங்கிக் கூற்றின் வரவு மீதி ரூபா 10000 ஆகும். இது
    1. வணிகத்தின் ஒரு சொத்தாகும்
    2. வங்கியின் சொத்தாகும்
    3. வணிகத்தின் பொறுப்பாகும்
    4. வங்கியின் பொறுப்பாகும்

18. வணிகமொன்று குபேரன் என்பவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ரூபா 45000 ஆனது இயந்திரக்கணக்கில் 54000 எனப்பதியப்பட்டிருந்தது. இவ்வழுவினை திருத்துவதற்கான மூலப்பதிவேடு
    1. பொதுநாட் குறிப்பேடு
    2. காசேடு
    3. கொள்வனவு தினசேரி
    4. விற்பனைத் தினசேரி

19. சத்தியன் என்பவர் 2000000 ரூபா பெறுமதியான தனது டிப்பர் வாகனத்தை அதே பெறுமதியில் காப்புறுதி செய்து கொண்டார். டிப்பர் வாகனம் விபத்துக்குள்ளானதில் ரூபா 500000 பெறுமதியான சேதம் ஏற்பட்டது. சத்தியன் காப்புறுதி கம்பனியிடமிருந்து 2000000 ரூபாவினை சேதத்திற்கான நட்ட ஈடாக கோரினார். காப்புறுதிக்கம்பனியிடமிருந்து நட்ட ஈடாகக் கிடைக்கும் தொகை யாது?
    1. 2000000 ரூபா
    2. 500000 ரூபா
    3. 600000 ரூபா
    4. 1000000 ரூபா

20. மின்னஞ்சல் (Email) ஒரு
    1. உள்வாரி, இலத்திரனியல், வாய்மொழி, தொடர்பாடல் முறை
    2. வெளிவாரி இலத்திரனியல் எழுத்துமூலமான தொடர்பாடல் முறை
    3. வெளிவாரி இலத்திரனியல் வாய்மொழி தொடர்பாடல் முறை
    4. வெளிவாரி இலத்திரனியல் சைகை மூலமான தொடர்பாடல் முறை

பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 21, 22ம் வினாக்களுக்கு விடை தருக.

**சாள்ஸ் வணிகமானது ரூபா 20000 கிரயமான பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தது. இதன் போது 10% வியாபார கழிவு வழங்கப்பட்டது. பின் பணம் செலுத்தியபோது 10% காசுக்கழிவும் பெறப்பட்டது.**

21. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை கணக்கீட்டுச்சமன்பாட்டில் பதியும் போது சொத்துக்களின் மீது ஏற்படக்கூடிய தேறிய தாக்கம்
    1. ரூபா 1800 ஆல் குறைவடையம்
    2. ரூபா 18000 ஆல் குறைவடையும்
    3. ரூபா1800 ஆல் அதிகரிக்கும்
    4. ரூபா 18000 ஆல் அதிகரிக்கும்

22. சாள்ஸ் வணிகத்தின் காசுக் கொடுப்பனவு தொடர்பிலான சரியான இரட்டைப்பதிவு யாது?
   1. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு 18000
      காசுக்கணக்கு செலவு 18000
   2. கடன்கொடுத்தோர் கணக்கு வரவு 20000
      காசுக்கணக்கு செலவு 20000
   3. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு 18000
      காசுக்கணக்கு செலவு 16200
      பெற்ற கழிவுக்கணக்கு செலவு 1800
   4. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு 20000
      காசுக்கணக்கு செலவு 18000
      பெற்ற கழிவுக்கணக்கு செலவு 2000

23. பாலன் என்பவருடைய பெயரில் குறுக்குக் கோடிட்ட காசோலை ஒன்று இலங்கை வங்கி மருதானைக்கிளையிலுள்ள அவரது நடைமுறைக்கணக்கில் வைப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட போது வங்கி அதிகாரியால் மறுக்கப்பட்டது. இக்காசோலையில் குறிப்பிட்டுள்ள குறுக்குக் கோடு யாது?

1.



2.



3.



4.



24. விற்பனை தினசேரி ஒரு
   1. பேரேட்டு கணக்காகும்
   2. நிதிக்கூற்று ஆகும்
   3. மூல ஆவணம்
   4. முதன்மை பதிவேடு ஆகும்.

25. சூழல் தொடர்பில் வணிகர்கள் கூடிய அக்கறை கொள்ள வேண்டும் அவ்வாறு இல்லா விட்டால் வணிகம் தொடர்ந்து இயக்க முடியாது போகலாம். அதன்படி இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களும் அச்சுறுத்தல்களும் உள்ளன. அவற்றுள் ஒரு சந்தர்ப்பத்தையும் ஒரு அச்சுறுத்தலையும் உள்ளடக்கிய விடையை தெரிக.
   1. உள்நாட்டு மதிப்பீடு, அரசியல் உறுதியின்மை
   2. சமாதானம், சனத்தொகை அதிகரிப்பு
   3. மோதல் நிலைமை கடுமையான சட்ட விதிகள்
   4. இயற்கை இடர், சர்வதேச சக்திகள்

26. வணிகத்தை நடாத்தும் விமலன் வங்கியில் கடன் பெறச் சென்றார். வங்கி அதிகாரிகள் ஒவ்வொரு வகையான அறிக்கையினை கேட்டார்கள். விமலன் அவ் கடன் பெறும் வேலையை கைவிட்டார். இது ஒரு வணிகரின் கூற்றாகும். இதற்கு காரணம் என நீர் கருதுவது
   1. வணிகருக்குள் வணிகக்கருத்து இல்லாமை
   2. வணிகரிடம் வணிகத்திட்டம் இல்லாமை
   3. நிதித்திட்டம் இல்லாமை
   4. சந்தைப்படுத்தல் திட்டம் இல்லாமை

27. உரிமையாண்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களை தெரிக.
   1. உரிமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து கடன் கொடுத்தோருக்கு செலுத்திய 5000 ரூபா
   2. காசுக்கு பொருள் கொள்வனவு ரூபா 5000
   3. காசுக்கு விற்பனை ரூபா 5000
   4. வங்கியிலிருந்து கடன் பெற்றது ரூபா 5000

28. ரூபா 25000 பெறுமதியான தளபாடங்கள் கபிலனிடம் கொள்வனவு செய்ப்பட்டது. கணக்கீட்டுச்சமன்பாட்டில் ஏற்படும் தாக்கம்
   1. சொத்து அதிகரிக்கும் பொறுப்பு குறையும்

2. பொறுப்பு அதிகரிக்கும் சொத்து குறையும்
3. சொத்தும் பொறுப்பும் அதிகரிக்கும்
4. சொத்தும் பொறுப்பும் குறையும்

29. தேயிலை உற்பத்தியினை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய இடம்
1. ஏற்றுமதிப்பயிர்கள் திணைக்களம்
2. இலங்கை ஏற்றுமதி சபை
3. இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்
4. கைத்தொழில் அமைச்சு

30. செலவு அதிகரித்தல் வரவு குறைதல் எனும் இரட்டைப்பதிவு தத்துவத்தை காட்டும் கணக்கு
1. கொடுத்த கழிவுக்கணக்கு
2. காசுக்கணக்கு
3. மூலதனக்கணக்கு
4. கொள்வனவுக்கணக்கு

31. மொத்த வியாபாரத்தையும் சில்லறை வியாபாரத்தையும் பிரித்தறிய உதவுவது.
1. விலை　2. அளவு　3. கழிவு　4. நோக்கம்

32. பின்வருவன வங்கியால் வழங்கப்படும் சில சேவைகள் ஆகும். இதில் நடைமுறை கணக்கை பேணும் வாடிக்கையாளருக்கு மட்டும் வழங்கும் சேவை எது?
1. நிலையியற் கட்டணக் கொடுப்பனவு
2. மேலதிக பற்று வசதி
3. நிலையான வைப்புப் பேணல்
4. இலத்திரனியல் பணம் தொடர்பிலான சேவை

33. தனத வணிகத்தை பதிவு செய்வதால் வணிகர் பெறக்கூடிய அனுகூலம்
1. கடன் பெறுவதில் வசதியீனம் ஏற்படல்
2. வரி செலுத்த நேரிடல்　3. அரசின் ஊக்குவிப்பைப் பெறல்
4. வணிக உரிமையாளர் வெளிப்படுதல்

34. விற்பனை மூலம் ரூபா 2000 பெறுமதியான காசோலை பெறும் போது இரட்டைப்பதிவு
1. வங்கிக்கணக்கு வரவு 2000, விற்பனைக்கணக்கு செலவு 2000
2. காசுக்கணக்கு வரவு 2000, விற்பனைக்கணக்கு செலவு 2000
3. விற்பனைக்கணக்கு வரவு 2000, காசுக்கணக்கு செலவு 2000
4. விற்பனைக்கணக்கு வரவு 2000, வங்கிக்கணக்கு செலவு 2000

பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35, 36 வரையான வினாக்களுக்கு விடை தருக

**31.03.2019 இல் நாதன் வணிகத்தின் சில்லறைக்காசாளரிடமிருந்து சில்லறைக் காசேட்டு மீதி 250 ரூபா ஆகும். பின்வருவன 2019 மார்ச் மாதத்திற்கான சில்லறைக்காசேட்டு பகுப்பாய்வு நிரல் மீதிகள் வருமாறு**

| | |
|---|---|
| **காகிதாகிகள்** | **250 ரூபா** |
| **பிரயாணச்செலவு** | **180 ரூபா** |
| **உபசரிப்பு செலவு** | **200 ரூபா** |
| **நானாவித செலவு** | **120 ரூபா** |

**01.04.2019இலிருந்து சில்லறைக் காசேட்டினை முற்பணப்பெறுமதியை 1500ரூபா வரை அதிகரிக்க நாதன் தீர்மானித்தார்.**

35. இவ்வணிகத்தின் 2019 மார்ச் மாதத்திற்கான சில்லறை காசேட்டின் செலவுகளின் பெறுமதி
1. 250 ரூபா　2. 750 ரூபா　3. 1000 ரூபா　4. 1500 ரூபா

36. 01.04.2019இல் இருந்தவாறான சில்லறைக்காசேட்டு மீள் நிரப்பல் தொகை
1. 250 ரூபா　2. 500 ரூபா　3. 1250 ரூபா　4. 1500 ரூபா

37. பரீட்சை மீதிக் கூட்டுத்தொகையில் வேறுபாட்டை ஏற்படுத்தும் வழுவைத் தெரிக

A - 6000 ரூபா விற்பனைப்பட்டியல் முற்றாக விடப்பட்டுள்ளது.

B - செலுத்திய மின் கட்டணம் 1000 ரூபா பேரேடுகளில் பதியப்படவில்லை

C - கொள்வனவு தினசேரியின் கூட்டுத்தொகை 2000 ரூபாவால் குறைவாக காட்டப்பட்டிருந்தது

D - இயந்திர திருத்தத்திற்கான ரூபா 2500 இயந்திரக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

1. Bயும் Cயும்
2. C மட்டும்
3. Aயும் Bயும்
4. Dயும், Bயும்

**பின்வரும் தகவல்களை பயன்படுத்தி 38, 39, 40ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| தளபாடம் | 60000 ரூபா |
| கடன்பட்டோர் | 30000 ரூபா |
| இருப்பு | 10000 ரூபா |
| கடன் கொடுத்தோர் | 20000 ரூபா |
| வங்கி கடன் | 10000 ரூபா |

38. மொத்த சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு
1. 90000 ரூபா
2. 100000ரூபா
3. 70000 ரூபா
4. 80000 ரூபா

39. மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி எவ்வளவு
1. 50000 ரூபா
2. 40000 ரூபா
3. 30000 ரூபா
4. 60000 ரூபா

40. இவ்வணிகத்தின் மூலதனம் எவ்வளவு
1. 70000 ரூபா
2. 60000 ரூபா
3. 50000 ரூபா
4. 40000 ரூபா